# தாவீதும் மற்றவர்களும் அச்சத்தையும் அவமானத்தையும் மேற்கொண்டார்கள்

குழந்தைகளின் ஆசிரியர் குழந்தைகள் பாடமான **A2b** யை வாசிக்கவும்

**1. காயப்பட்ட, வெட்கமடைந்த, கோழையான ஆட்டுக்குட்டிகளை தைரியப்படுத்த உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.**

தமது இழந்து போன காயப்பட்ட ஆடுகளுக்கு இரக்கத்தைச் செய்யும் உணர்வை உங்களுக்கு தரும்படி நல்ல **மேய்ப்பனை வேண்டிக் கொள்ளுங்கள்.**

**தேவனிடம் இருந்து தைரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.** 1 சாமுவேல் 17 ஐ வாசித்து, எவ்வாறு ஒரு ஆடு மேய்க்கும் பையன் அச்சத்தை மேற்கொண்டு ஒரு சிங்கத்தையும், ஒரு கரடியையும், ஓர் அரக்கனையும் கொன்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**தேவன் அவமானத்தை அகற்றட்டும்.** தாவீதை தேவன் எவ்வாறு அவமானத்தில் இருந்து விடுவித்தார் என்பதை 2 சாமுவேல் 11, 12ல் காண்க.

*[ஏந்தியனாகிய உரியாவுக்கு எதிராக தான் செய்த அருவருப்பான பாவத்தை எதிர்கொள்ள தாவீதுக்கு தைரியம் தேவைப்பட்டது. உரியாவின் மனைவியாகிய பத்சேபாளிடம் தான் செய்த ஒழுக்கக்கேட்டை மறைக்க அவனை அவன் போரில் சாகும்படி ஏற்பாடு செய்தான். நாத்தான் எதிர்கொண்டு எச்சரிக்கும் வரை, தான் செய்தது தீமை என்று தனக்குத்தானே கூட தாவீது ஒத்துக்கொள்ளவில்லை. தேவனிடம் தனது பாவங்களை அறிக்கை இட்ட போது, அவன் தனது அவமான உணர்வில் இருந்து விடுபட்டான். சங்கீதம் 51ல் இந்த அறிக்கையைக் காணலாம்.]*

உண்மையான குற்றத்திற்கும் அவமான உணர்வுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுதல். மேய்ப்பனின் கதைப் புத்தகம், பகுதி III, 12ம் அத்தியாயத்தில், தற்கொலை செய்து கொள்ள கத்தியை எடுத்துக் கொண்ட ஒரு மாணவனைப் பற்றிப் படிக்கிறோம். “நிறுத்து” என்று அவனது நண்பன் கத்தியபோது அவன் இவ்வாறு பதிலளித்தான்.

> “ஒரு பேராசிரியர் தோல்வி மதிப்பெண்ணைக் கொடுத்ததால் என்னால் பல்கலைக்கழகத்தில் படிப்பைத் தொடர முடியாது. நான் எனக்கும் என் குடும்பத்திற்கும் அவமானத்தை கொண்டு வந்து விட்டேன். நான் சாக வேண்டும்”.
>
> அவனது நண்பன் அவனுக்கு உறுதி அளிக்கிறான், “ஒரு பாடத்தில் தோல்வி அடைந்ததால் தேவன் உன்னை கெட்டவன் என்று கருதுவதில்லை. நீ முடிந்த அளவு நன்றாக எழுதினாய். தற்கொலை செய்வது குற்றம் நிறைந்த அவமானமாகும்”.

“அப்படியானால் பேராசிரியரின் விலை உயர்ந்த மைக்கிராஸ்கோப்பைத் திருடுவேன்”.

“இல்லை! பழிவாங்குவதற்காகத் திருடினால் அது உண்மையிலேயே உன்னை குற்றவாளியாக மாற்றும். நான் அவமானத்தைப் பற்றியும் குற்றத்தைப் பற்றியும் கூறுகிறேன். அவமானம் என்பது ஓர் உணர்வே. குற்றமுள்ள அவமானம் தேவ தண்டனைக்கு உரியது. பல்கலைக் கழகத் தேர்வில் தோற்றதால் நீ அவமானகரமாக உணர்கிறாய். ஆனால் தீமை எதையும் நீ செய்யவில்லை. ஆனால் திருடுவது அவமானத்தையும் குற்றத்தையும் கொண்டு வரும்.”

“எனக்கு எந்த வேறுபாடும் தெரியவில்லை.”

“சவுல் அரசனைப் பற்றியும் அவனது இரண்டு வகையான அவமானங்களைப் பற்றியும் வாசிக்கலாம்”.

(மேய்ப்பனின் கதைப் புத்தகத்தை www.Paul-Timothy.net லிருந்து இலவசமாக டவுண் லோட் செய்து கொள்ளலாம்)

குற்றம் மற்றும் அவமானம் குறித்து மாணவன் என்ன அறிந்து கொண்டான் என்பதை 1 சாமு. 20:27-34 ல் காண்க

- யோனத்தான் குடும்பத்தை அவமானப்படுத்தியதாக சவுல் இராஜா ஏன் கூறினான்? (வசனம் 30).
- சவுல் உண்மையிலேயே செய்யத் துணிந்த உண்மையான அவமானகரமான விஷயம் என்ன? (வசனம் 34).
- சவுல், யோனத்தான் ஆகிய இருவரும் அடைந்த அவமானங்களில், தேவனுக்கு முன்பாகக் குற்றமானது எது?

தாவீதோடு நட்பாக இருப்பதால் யோனத்தான் குடும்பத்துக்கு அவமானம் இழைத்து விட்டதாக யோனத்தானின் தந்தையான சவுல் இராஜா கூறினான். ஆனால், யோனத்தான் தேவனுக்கு முன்பாகக் குற்றம் அற்றவனே. அவனுடைய பொறாமை படைத்த தகப்பனான சவுலோ ஒரு குற்றமற்ற மனிதனான தாவீதைக் கொல்ல நினைத்தும் அதைக்குறித்து வெட்கக்கேடாக உணரவில்லை. சவுலுடைய இருதயமோ தேவனுக்கு முன்பாக அவமானம் நிறைந்ததாக இருந்தது. நமது பெற்றோரோ, ஓர் ஆசிரியரோ, அதிகாரத்தில் உள்ள ஒரு மனிதரோ நம்மை பொது இடத்தில் கண்டிக்கும்போது நாமும் அவமானம் அடைகிறோம். முட்டாள்தனமான தவறுகளை செய்யும்போது நாம் வெட்கம் அடைகிறோம். ஆனால் இவை எல்லாம் உண்மையில் குற்றம் அல்ல.

சவுலையும், யோனத்தானையும் பற்றி அறிந்து கொண்டபின் அந்த மாணவன் ஆச்சரியத்தோடு கூறுகிறான், “ஓகோ! பல்கலைக்கழக தேர்வில் தோல்வி உறுவது தேவனுக்கு முன் ஓர் அவமானகரமான குற்றம் அல்ல. அதே சமயத்தில் பேராசிரியரிடம் இருந்து திருடுவது ஒரு தீமையான செயலாகும். தீமை அல்லாத ஒன்றைப் பற்றி நான் அவமானம் அடைந்தேன். ஆனால் திருடுவது குறித்து நான் வெட்கப்படவில்லை. இவ்வாறு அவமானகரமாக உணர்வதை எப்படி தடுத்து நிறுத்த முடியும்”?

“உன் பாவங்களை தேவனிடத்தில் அறிக்கையிடு. இயேசு நமது பாவங்களுக்காகவே மரித்ததால் அவர் உன்னை மன்னிப்பார்”. அந்த மாணவன் தனது நண்பனின் உதவியோடு தான் திருட எண்ணியதற்காகவும், மேலும் தனது பின் பாவங்களுக்காகவும் இயேசுவின் நாமத்தினால் தன்னை மன்னிக்கும்படி தேவனிடம் வேண்டுகிறான். மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் கண்டடைகிறான்.

மற்றவர்களைத் **தேற்றி ஊக்கப்படுத்தும்** திறனை வளர்த்துக்கொள்ளுங்கள். லூக்கா 15:1-10ல் ஒரு நல்ல மேய்ப்பன் என்ன செய்வான் என்பதைக் **காண்க.** எபிரேயர் 12ம் அதிகாரத்தில் **காண்க:**

- துன்பப்படுகிற மக்கள் தேவன் தரும் தண்டனையை ஏன் நன்றியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்?
- அவர்களுடைய எதிர்கால நம்பிக்கை என்ன?

தவறு செய்யும் விசுவாசிகளை திருத்திப் பழைய நிலைக்கு கொண்டு வருபவருடைய கடமைகள் என்ன என்பதை கலாத்தியர் 6:1-5 ல் **காண்க.**

மனந்திரும்பும் பாவிகளுக்கு உங்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவரால் என்ன செய்ய முடியும் என்பதை யோவான் 20:21-23 ல் **காண்க.**

தாங்கள் மோசமானவர்கள் என்று எண்ணும் மக்களைத் தேற்ற ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய இரண்டு விஷயங்களை நீதி. 18:13-14 ல் **காண்க.**

நீதிமொழிகள் 18:13-14 ஐ மனப்பாடம் செய்க

**2. இந்த வாரத்தில் செய்யக் கூடிய விஷயங்களை உடன் ஊழியர்களுடன் சேர்ந்து திட்டமிடவும்**

- ஊக்கமும் உற்சாகமும் தேவைப்படும் மக்களைக் குறித்து எண்ணிப் பாருங்கள். தேவ உதவியோடும் மன்னிப்போடும், அவமானங்களையும் பிற பிரச்சினைகளையும் தாவீது மேற்கொண்டது போல, அவர்கள் தங்கள் அச்சத்தை எதிர்கொள்ள, சென்று சந்தித்து அவர்களுக்கு உதவுங்கள்.
- யாராவது எதைப்பற்றியாவது வருத்தப்படும்போது கவனித்துக் கேட்டு உங்கள் அக்கறையைத் தெரியப்படுத்துங்கள். அவர்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.
- ஒரு விசுவாசி மந்தையில் இருந்து வழிவிலகிப் போனாலோ, வேறொருவர் மேல் கசப்புணர்வு கொண்டவராக இருந்தாலோ, உடன் உதவியாளர்களோடு சென்று அவர்களை, (கலாத்தியர் 6:1 கூறுவது போல) சந்தியுங்கள். அவர் பாவம் செய்திருந்தால், மென்மையாக நல்வழிப்படுத்துங்கள்.
- பிணியாளர்களை சென்று சந்தித்து இயேசுவின் நாமத்தினால் அவர்களுக்காக ஜெபியுங்கள்

**3. வரும் ஆராதனை நேரத்துக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுங்கள்**

சூழ்நிலைக்கும் , அந்தந்த பகுதி கலாச்சாரங்களுக்கும் ஏற்ப செயல்பாடுகளைத் தெரிந்து எடுக்கவும்.

தாவீதும் கோலியாத்தும் என்ற நாடகத்தை நடிக்குமாறு பிள்ளைகளுக்குக் கூறவும். அதைப் பற்றிய கேள்விகளை அவர்கள் தயாரித்து பெரியவர்களிடம் கேட்கலாம்.

நம்பிக்கை மற்றும் அவநம்பிக்கை குறித்த ஓர் ஓரங்க நாடகத்தை அரங்கேற்றலாம்.

**நம்பிக்கை:** "என் பெயர் நம்பிக்கை; என்னிடம் நல்ல செய்திகள் இருக்கின்றன."

**அவநம்பிக்கை:** "பொறு! என்னுடைய பெயர் அவநம்பிக்கை. என்னிடம் கெட்ட செய்திகள் இருக்கின்றன. நான் இறந்துவிட்டேன்."

**நம்பிக்கை:** "நீ என்னவாகிவிட்டாய்?"

**அவநம்பிக்கை:** "நான் இறந்துவிட்டேன். உன்னால் கேட்க முடியவில்லையா? ஒருவேளை நீயும் கூட இறந்து போயிருக்கலாம்."

**நம்பிக்கை:** "நீ இறந்து போய்விட்டதாக ஏன் கூறுகிறாய்? உன்னுடைய நாடித் துடிப்பை நான் பார்க்கட்டும்" (மணிக்கட்டில் கைவைத்து) உன் இதயத் துடிப்பு பலமாக இருக்கிறது. எனவே நீ சாகவே இல்லை."

**அவநம்பிக்கை:** "இல்லை! நான் இறந்ததாகக் கனவு கண்டேன். விழித்தபோது இறந்தவனாகவே இருந்தேன்."

**நம்பிக்கை:** "அவநம்பிக்கையே! நீ மரணத்தைக் குறித்து அதிகமாக பயப்படுகிறாய்!"

**அவநம்பிக்கை:** "பின்னால் நடக்கப் போகிறவைகளைக் குறித்து நான் பயப்படுகிறேன். நான் செய்த விஷயங்களைக் குறித்து வெட்கப்படுகிறேன்."

**நம்பிக்கை:** "அவநம்பிக்கையே! தேவன் அவமானத்தையும் குற்றத்தையும் எவ்வாறு உனக்கு நீக்குகிறார் என்பதைக் கூறுவோம்." (சபையைப் பார்த்து) "தேவன் நமது அவமானங்களை எவ்வாறு நீக்குகிறார் என்பதை அவநம்பிக்கைக்கு விளக்க எனக்கு உதவுங்கள். தயவு செய்து உதவி செய்யுங்கள்." (அவநம்பிக்கையிடம் பேசுமாறு சபையாரிடம் கேளுங்கள். சிலரைப் பேர் சொல்லிக்கூட நீங்கள் அழைக்கலாம்).

**1 சாமுவேல் 20:27-34** ஐ வாசித்துக் கூறி அல்லது நடித்து இருவிதமான அவமானங்கள் குறித்து விளக்கவும்.

2 சாமுவேல் 11&12 ஐ வாசித்துக் கூறி அல்லது நடித்து தேவன் தாவீதை அவமானத்தில் இருந்து எவ்வாறு விடுவித்தார் என்பதைக் காண்க.

1 கொரி 10:16 ஐ வாசித்து கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்தவும். எதில் நாம் பங்கு கொள்கிறோம் என்பதை விவரிக்கவும்.

அந்த வாரத்தில் செய்யத் திட்டமிட்டுள்ள செயல்பாடுகளை அறிவிக்கவும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் உதவ, இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களை அமைக்கவும். ஜெபித்து, திட்டங்களை உறுதிப்படுத்தி ஒருவருக்கொருவர் உதவி செய்யட்டும்.

Copyright © 2003 by Paul-Timothy. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net